අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/1/1/4/4

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2020.09. 21

சகல மாகாண கல்விச் செயலாளர்கள்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
சகல அதிபர்கள்,

## அகில இலங்கை பாடசாலை மேற்கத்தேய சங்கீதம் மற்றும் நடனப் போட்டி - 2021
## சுற்றறிக்கை இலக்கம் . 28/2020

கல்வி அமைச்சின் அழகியற் கிளையினால் நாட்டின் சகல பாடசாலை மாணவர்களினதும் மேற்கத்தேய சங்கீதத் திறமையினை விருத்தி செய்யும் நோக்குடன் இப்போட்டித் தொடர் ஒழுங்கு செய்யப்படுகிறது.

### 1.0. நோக்கம் மற்றும் எதிர்பார்ப்புக்கள்

1.1. பாடசாலை மாணவர்களுக்கு தமது திறமைகளைக் காண்பிப்பதற்காக வாய்ப்பினை வழங்குதல்.

1.2. ஆசிரியர் மற்றும் மாணவர்களின் ஆக்க இயலுமைகளை ஊக்குவித்தல் மற்றும் விருத்தி செய்தல்.

1.3. மாணவர்களின் திறமைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் உயர் சங்கீத இரசனையினை விருத்தி செய்தல்.

1.4. மாணவர்களின் ஆளுமை மற்றும் ஒழுக்க விழுமியங்களை விருத்தி செய்தல்.

### 2.0. பொதுவான நிபந்தனைகள்

2.1. இப் போட்டி நாட்டின் சகல பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளுக்காக திறந்த அடிப்படையில் இடம்பெறும்.

2.2. அரச நியமனத்தைப் பெற்றுள்ள மேற்கத்தேய சங்கீத ஆசிரியரைக் கொண்ட சகல பாடசாலைகளும் இப்போட்டியில் பங்கேற்பது கட்டாயமானதாகும்.

2.3. அமைச்சினால் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறுவதனால் அப் பாடசாலை போட்டியிருந்து நீக்கப்படும்.

2.4. சகல பாடசாலைகளும் கீழ்க் குறிப்பிட்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

2.4.1. A1 வகை - • சகல தனியார்/சர்வதேச பாடசாலைகள்

• தொழில்சார் ஆலோசகர்களின் கீழ் மாணவர்கள் பயிற்சி பெறும் அரச பாடசாலை

2.4.2. A2 வகை - • சகல தேசிய பாடசாலைகள் மற்றும் 1AB வகைக்குரிய மேற்கத்தேய சங்கீத ஆசிரியர் உள்ள வெளிவளவாளரின் கீழ் மாணவர்கள் பயிற்சி பெறாத பாடசாலை

2.4.3. (அ) B வகை - A1 மற்றும் A2 வகைக்குரியதல்லாத சகல பாடசாலைகளும்

2.4.3.(ஆ) **ஐந்து வருடங்களை விடக் குறையாத காலங்கள்** பாடசாலைப் பாட விதானத்தின் பாடமாக மேற்கத்தேய சங்கீதம் கற்பிக்கப்படும் சகல அரச பாடசாலைகளும் **வகை B இன் கீழ் விருப்பமாயின் இணைய** முடியும்.

2.5. தேவைகளுக்கு ஏற்றவாறு மேற்கத்தேய சங்கீத ஆசிரியர்/ ஆசிரியர்களுக்கு உதவும் வகையில் வாத்தியத்தின் ஊடாக பங்கேற்க முடிவதுடன் செயற்படுத்தல் (Conducting) முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

2.6. **வகை B** இற்காக மாத்திரம் உதவி வாத்தியத்திற்கான ஒலிநாடா பதிக்கப்பட்ட சங்கீதத்தைப் பயன்படுத்த முடியும்.

2.7. அரங்கில் நுழைந்ததிலிருந்து எந்தவொரு நிகழ்ச்சிக்குமான கால அளவு **8 நிமிடங்களைத் தாண்டாதிருத்தல்** வேண்டும். எடுத்துக் கொள்ளப்படும் மேலதிக நேரத்திற்கு தண்டனைப்புள்ளிகள் கழிக்கப்படும்.

2.8.போட்டியில் பங்கேற்கும் சகல மாணவர்களும் கீழ்க் குறிப்பிட்டவாறு உடையினை அணிந்திருக்க வேண்டும்.

பெண் - வெள்ளை சேட் மற்றும் கறுப்பு சாயா (முழங்காலுக்கு கீழ் ஒரு அங்குல அகலம்) / கறுப்பு நிற நீள் காற்சட்டை

ஆண் - வெள்ளை சேட் மற்றும் கறுப்பு நிற நீள் காற்சட்டை

* இதற்கு மேலதிகமாக பாடசாலையை அடையாளம் காணக்கூடிய வகையில் டை, போ மட்டும் இலச்சினை அணிய முடியாது.

2.9.கடந்த வருடம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட வெற்றியாளர்கள் இம்முறையும் அதே வகையான போட்டிக்கு விண்ணப்பிக்க முடியாது.

3.0. குழு

| | | | |
|---|---|---|---|
| 3.1 | ஆரம்பப் பிரிவு | தரம் 1 | தரம் 5 |
| 3.2 | கனிஷ்ட பிரிவு | தரம் 6 | தரம் 9 |
| 3.3 | சிரேஷ்ட பிரிவு | தரம் 10 | தரம் 13 |
| 3.4 | திறந்த பிரிவு | சகல வயதுப் பிரிவின் மாணவர்கள் | |
| 3.5 | கலவன் | ஆண் மற்றும் பெண் (குழுப் பாடலுக்கு மாத்திரம்) | |

* குழுப் பாடல் - பாடல் குழுவிற்காக மாத்திரம் சிரேஷ்ட பிரிவிலோ அல்லது கனிஷ்ட பிரிவிலோ 09 ஆம் தர மாணவர்களுக்குப் பங்கேற்க முடியும்.

## 4.0. வகையினைத் தேர்ந்தெடுத்தல்

4.1. போட்டியில் பங்கேற்கும் ஒற்றையர் போட்டிப் பிரிவுகளை விட குழுப் போட்டி வகைக்காக பங்கேற்பதன் மூலம் கூடுதலான மாணவர் எண்ணிக்கைக்கு பங்கேற்பதற்கான வாய்ப்பினை வழங்க அறிவுறுத்தப்படுகின்றது.

4.2. ஒரு பாடசாலைக்கு பங்கேற்கக்கூடிய உயர்ந்தபட்ச வகைகளின் எண்ணிக்கை 05 என்பதுடன் சகல வகைகளுக்காகவும் பங்கேற்க முடிவது ஒரு குழுவிற்கு மாத்திரமாகும்.

4.3. கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு வகைகளைத் தேர்ந்தெடுக்க முடியும்.

| வகைகளின் எண்ணிக்கை | | ஒற்றையர் | குழு |
|---|---|---|---|
| 01 | | | 01 |
| 02 | அல்லது | 01 | 01 |
| | | | 02 |
| 03 | அல்லது | | 03 |
| | | 01 | 02 |
| 04 | அல்லது | | 04 |
| | | 01 | 03 |
| 05 | | 01 | 04 |
| | அல்லது | 02 | 03 |
| | அல்லது | | 05 |
| | | | |

4.4. ஒரு போட்டிக்காக பங்கேற்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கை

| | | | |
|---|---|---|---|
| 4.4.1. | குழுப் போட்டி | குறைந்த பட்சம் - 15 | உயர்ந்த பட்சம் - 35 |
| 4.4.2. | பியானோ எக்கோடிங்/ கிட்டார் என்செம்பிள் | குறைந்த பட்சம் - 05 | உயர்ந்த பட்சம் - 25 |
| 4.4.3 | Mixed Instrumental | குறைந்த பட்சம் - 15 | உயர்ந்த பட்சம் - 35 |
| | Chamber Groups | குறைந்த பட்சம் - 04 | உயர்ந்த பட்சம் - 08 |
| 4.4.4 | வான்ட் வாத்தியம்/ ஒக்கஸ்டா | குறைந்த பட்சம் - 20 | உயர்ந்த பட்சம் - 40 |

## 5.0. போட்டி

கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் கீழ்வரும் தகவல்களைப் பார்வையிட முடியும்.

5.1 போட்டி இரு கட்டங்களாக நடைபெறவுள்ளது.

- முதலாவது போட்டிச் சுற்று மாகாண மட்டத்தில் 06 - 12 மார்ச் 2021
- மே 02ஆம் திகதி நடைபெறவுள்ளது.
- இறுதிப் போட்டிச் சுற்று தேசிய மட்டத்தில் மே மாதம் 2021 நடைபெறும்.
  (சங்கீத மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா ஜூலை மாதத்தில் 2021 நடைபெறவுள்ளது.)

- போட்டிக்குரிய கட்டாய சங்கீத இசைக் குறிப்பு மற்றும் பாடசாலை தொடர்பான தகவல்கள் இணையத்தளத்தில் உள்ளடக்கப்படும் தினம் சனவரி 2021 திகதியாகும்.
- மாகாண மட்டப் போட்டிகள் கல்வி அமைச்சு மற்றும் மாகாணக் கல்வி அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் நடைபெறும்.

5.2. போட்டித் தொடரில் தேசிய மட்டத்தில் பங்கேற்பதற்காக மாகாண மட்டத்தில் 50% உயர்ந்த பட்ச புள்ளியினைப் பெற்றிருக்க வேண்டும்.

5.3. மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக் கொள்ளும் வகைகள் தேசிய மட்டத்திற்குத் தகைமை பெறுவதுடன் இதற்கு மேலதிகமாக முதலாவது சுற்றில் சகல மாகாணங்களிலிருந்தும் அவ்வவ் பிரிவுகளுக்காக பங்கேற்கும் குழுக்களில் கூடுதலான புள்ளிகளை பெற்ற தொடருக்கமைய மேலதிகமாக 02 பாடசாலைகளுக்கு இறுதிப் போட்டியில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும்.

## 6.0. போட்டி வகைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6.1 | A1/A2/ B | பாடல் | ஒற்றையர் | கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட (ஆண்/ பெண்) | கட்டாயப் பாடல் மற்றும் விருப்பப் பாடல் **(Set Piece & a Choice Piece)** சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| 6.2 | | பாடல் | குழு | ஆரம்ப/ கனிஷ்ட /சிரேஷ்ட/ திறந்த (ஆண்/ பெண் / கலப்பு ) | **Two Choice Pieces of contrasting style** சமர்ப்பிக்கப் படல் வேண்டும். |
| 6.3 | | ரெக்கோடர் | ஒற்றையர் | கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட | |
| 6.4 | | பியானோ | ஒற்றையர் | கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட | |
| 6.5 | | ரெக்கோடர் | குழு | கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட | |
| 6.6 | | மலோடிகா | குழு | கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட | |
| 6.7 | | பெர்குசன் வேண்ட் | குழு | ஆரம்ப<br>வேண்டில் மலோடிகா உள்ளடக்கப்பட முடியும்.<br>**Keyboard accompaniment only in piano mode.** ( பதிவு செய்யப்பட்ட அல்லது நேரடி சங்கீதத்தைப் பயன்படுத்த முடியும்) | |
| 6.8 | | மிக்ஸ்ட் இன்ஸ்ட்ருமென்டல் | குழு | கனிஷ்ட /சிரேஷ்ட/ திறந்த<br>பியானோ, எலக்ரோனிக் கீபோட், எலக்ரிக் கிட்டார் அல்லது ஒரியன்டல் சங்கீதப் பொருட்களை பயன்படுத்துவது முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது. பிராக்ஸ், சுசிர வேண்ட் வாத்தியக் குழுப் பொருட்களை பயன்படுத்துவ தாயின் ஒரு வகையில் ஒன்றை மாத்திரம் பயன்படுத்த முடியும். | |
| 6.9 | A1/A2 | கிட்டார் | குழு | திறந்த | **Two Choice** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6.10 | | பியானோ எக்கோடியன் | குழு | | **Pieces of contrasting style** சமர்ப்பிக்கப் படல் வேண்டும். |
| | | சாம்பர் | குழு | | |
| 6.11 | | Chamber | Group | **Open** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6.12 | உயர் தரம் | வின்ட் வேன்ட் | குழு | திறந்த(ஆண்/ பெண் / கலப்பு ) **Set Piece & Choice Piece** சமர்ப்பிக்கப்பட வேண்டும். | **Two Choice Pieces of contrasting style** |
| | பொதுத் தரம் | | | | |
| 6.13 | | ஒக்கஸ்டா | குழு | திறந்த **Set Piece & Choice Piece** சமர்ப்பிக்கப்பட வேண்டும். | |
| 6.14 | A1/A2 | மேற்கத்தேய நடனம் Original or improvised | குழு | • ஆரம்ப வயதுக்குப் பொருத்தமான நடனம்<br>• கனிஷ்ட /சிரேஷ்ட/ திறந்த | மேற்கத்தேய நடனம் **(Western Country Dances and Line Dances only)** |

- நடனத்திற்காக பதிவு செய்யப்பட்ட அல்லது நேரடி சங்கீதத்தைப் பயன்படுத்த முடியும்.
- கடந்த இரு வருடங்களில் தயாரிக்கப்பட்ட நடனங்களை மீள முன் வைப்பது தவிர்க்கப்பட வேண்டும். (2017 & 2018)
- பாடசாலைக் காட்சிக்காகப் பொருத்தமானவாறு ஆடைகளை அணிந்து பயன்படுத்த வேண்டும்.
- ஆடை அணிகலன்களுக்காக புள்ளி வழங்கப்படாது என்பதினால் மாகாண மட்டத்திலான போட்டிக்காகத் தேவையற்றவாறு செலவினங்களை மேற்கொள்வதிலிருந்து தவிர்ந்து கொள்வதுடன் தேசிய மட்ட நடனப் போட்டிகளில் எளிமையான பொருத்தமான ஆடை அணிகலன்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

7.0. போட்டிக்குப் பயன்படுத்தும் கட்டாய இசைக் குறிப்பு

7.1. கல்வி அமைச்சின் இணையத்தளத்தின் ஊடாக கட்டாய சங்கீத வகையினை தரவிறக்கம் செய்து கொள்ள முடிவதுடன் வேறு பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **www.moe.gov.lk**

7.2. கட்டாயப் பாடலுக்கு மேலதிகமாக தாங்கள் விரும்பிய பாடலையும் சமர்ப்பிக்க வேண்டும். அதனை எந்த பிரதி ஊடாகவும் சமர்ப்பிக்க முடிவதுடன், போட்டியில் பங்கேற்பவரின் விருப்பத்திற்கு ஏற்றவாறு இறுதிச் சுற்றில் (தேசிய மட்டத்தில்) மாற்றங்களை மேற்கொள்ள முடியும்.

7.3. ரேக்கோடர் விண்ட் பாண்ட் மற்றும் ஓர்கேஸ்ட்ரா இதற்கு மேலதிகமாக செற்பீசும் பாவித்துக்கொள்ள முடியும். நீங்கள் விரும்பினால் பொருத்தமான இசைக்கருவியை தெரிவு செய்து நிகழ்த்தலாம்.

7.4. மாகாண மற்றும் தேசிய மட்டப் போட்டிகளின் போது தங்களது விருப்பத்திற்கு ஏற்றவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்/ சங்கீதத்திற்குரிய சுருதியின் இசைக் குறிப்புப் பிரதியும் நடுவர் சபைக்கு வழங்கப்பட வேண்டும். இக்கோரிக்கையைப் பூர்த்தி செய்யாத போட்டியாளர்களுக்குத் தண்டனைப் புள்ளிகள் 5 விதிக்கப்படும்.

7.5. ஆரம்பப் பிரிவுக்கான விருப்பப் பாடல் அபிநயப் பாடலாக (Action song) இருத்தல் வேண்டும்.

7.6. **போட்டியில் பங்கேற்கும் மாணவர்களின் பெயர்ப் பட்டியல் MS Office Word Compatibility Mode மூலம் தயாரித்து இறுவட்டுக்கள் மூலம் சமர்ப்பிக்க வேண்டியதுடன் மாணவர்களின் பெயர்ப் பட்டியலை அதிபர் ஊடாக உறுதிப்படுத்திக் கொண்டு வர வேண்டும். இம்மாணவர்கள் கல்வி பயிலும் வகுப்பு அவ்வவ் மாணவர்களுக்கு முன்னால் தனித்தனியாக குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.**

**தேசிய மட்டத்தில் இப்பெயர்ப் பட்டியலைச் சமர்ப்பிக்கும் போது மாணவர்களின் பெயர், வகுப்பு மற்றும் கையொப்பம் என்பவற்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.**

- **மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல விபரங்களையும் சரியாக வழங்காத எந்தவொரு பாடசாலைக்கும் இப்போட்டியில் பங்கேற்க இடமளிக்கப்படமாட்டாது.**

**8.0. போட்டியில் பங்கேற்பதற்காக மாணவர்களை அழைத்துச் செல்லல்.**

8.1. ஒரு வகைக்காக பங்கேற்கும் மாணவர் எண்ணிக்கை 18 அல்லது அதனை விடக் குறையும் பட்சத்தில் அவர்களுடன் 02 ஆசிரியர்கள் வருகை தர வேண்டியதுடன், அதனை விட அதிகரிக்கும் சகல 10 மாணவர்களுக்காகவும் மேலதிக ஆசிரியர் ஒருவர் வீதம் சமூகமளிக்க வேண்டும்.

**9.0. கொடுப்பனவு**

9.1 இதற்காக ஆசிரியர் மற்றும் மாணவர்களுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படமாட்டாது.

**10.0. விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பித்தல்**

10.1 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை எதிர்வரும் 04 திகதி திசெம்பர் மாதம் 2020 அல்லது அதற்கு முன்னர் கீழே உள்ள இணையத்தள முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

10.2 ஏதேனும் போட்டி வகையிலிருந்து விலகும் போது மாகாணப் போட்டிச் சுற்றுக்கு 30 நாட்களுக்கு முன்னர் எழுத்து மூலம் அது தொடர்பில் அறிவிக்க வேண்டும். இந்நிபந்தனைகளை மீறும் விண்ணப்பதாரர்கள் 02 வருட கால போட்டித் தடைக்கு உட்படுவர்.

**குறிப்பு - நடுவர் சபையின் தீர்மானம் இறுதித் தீர்மானம் என்பதுடன் நடுவர் சபையின் தீர்மானத்தை எதிர்ப்பதாயின் போட்டியிலிருந்து விலக வேண்டி ஏற்படும். மேலும் இது தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.**

பேராசிரியர் கே.கபில சி.கே.பெரேரா,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

SPECIMEN APPLICATION FORM

# ALL ISLAND SCHOOLS WESTERN MUSIC & DANCE COMPETITION - 2021

Fill the form in block capital letters.

| | |
|---|---|
| Province :- | |

| | |
|---|---|
| Name of School :- | |

Write the name of school as given in the example "ANULA VIDYALAYA, NUGEGODA"

| | | |
|---|---|---|
| Category :- | | (A1 /A2 /B ) |

| | |
|---|---|
| Group :- Primary/Junior/ Senior/ Open:- :- | |

√ (Tick) the cage.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Section Selected :- | Vocal | | Solo | | Choir | |
| Girls/ Boys/ Mixed | | | | | | |

| | Solo | Group |
|---|---|---|
| Recorder | | |
| Piano | | |
| Melodica | | |
| Accordion | | |
| Percussion Band | | |
| Mixed Instrumental | | |
| Guitar | | |
| Chamber | | |
| Wind ensemble | | |
| Orchestra | | |
| Dance | | |

| | |
|---|---|
| Name of Teacher :- | |
| Assisted by :- | |

| | | |
|---|---|---|
| Contact Number of teachers / in-charge :- | Tel. No. Fixed Line | Mobile Tel. No. |

Music Teacher ______________________ Principal ______________________

Date........................................... ***Each entry should be on a separate Application Form***